அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண். 134 / 2017
தேதி. 13.11.2017

**ஆந்திர மாநில படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கும்,**
**ஈரான் - ஈராக் எல்லையில் நிலநடுக்கம் காரணமாக உயிரிழந்தவர்களுக்கும்**
**சமக நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்**

ஆந்திர மாநிலம் கிருஷ்ணா நதியில் படகு கவிழ்ந்ததால் ஏற்பட்ட விபத்தில் 19 பேரும், ஈரான் - ஈராக் எல்லையில் ஏற்பட்ட நிலநடுக்கம் காரணமாக 145 பேரும் உயிரிழந்த சம்பவங்கள் வேதனை அளிப்பதாக உள்ளன.

என் மண்ணில் நடந்தாலும், எம்மண்ணில் நடந்தாலும், இவை போன்ற சம்பவங்கள் நெஞ்சை உருக்குவதாக அமைந்து விடுகிறது. எங்கு இருந்தாலும், மனித உயிர்களின் மதிப்பு விலையில்லாதவையாகும்.

ஆந்திராவில் படகு கவிழ்ந்த சம்பவம் எச்சரிக்கையுடன் பயணிக்க வேண்டியதன் அவசியத்தையும், ஈரான் நிலநடுக்க சம்பவம், இயற்கையின் சக்திக்கு முன், மனித சக்தியின் இயலாமை நிலைமையும் எடுத்துக்காட்டுவதாக உள்ளன. இயற்கையை மதித்து, இயற்கைச் சூழல்களான மரங்கள், நதிகள், மண் போன்றவற்றைப் பேணிக் காக்க வேண்டும் என்ற செய்தியைத் தான் இயற்கை நமக்கு போதனையாகச் சொல்லி வருகிறது.

இவ்விரண்டு சம்பவங்களிலும் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆர்.சரத்குமார்**

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com